**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 20 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மூலதன மானியக் கணக்கிலான ரூபா 12,944,100 பெறுமதியில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 11,615,714 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.2 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கு மேற்பட்ட கைத்தொழில் கடன்கொடுத்தோர் மீதியின் பெறுமதி ரூபா 12,196,364 ஆகக் காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,431,506 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா

4,554,431 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 7,877,075 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. அவ் அதிகரிப்பிற்காக 05 வருமான விடயங்களில் 13 சதவீதம் முதல் 250 சதவீதம் வரையான அதிகரிப்பும் 02 செலவின விடயங்களில் 21 சதவீதம் முதல் 63 சதவீதம் வரையான குறைவும் அடிப்படையாகக் காரணமாகியிருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை அறவீடுகள் | 2015 ஆண்டில் பட்டியலிடப்பட்டவை | ஆண்டில் பட்டியலிடப்பட்டவற்றிலிருந்தான அறவீடுகள் | 2015.12.31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|
| வீத வரி | 266,254 | 1,504 | 575,507 | 383,195 | 457,062 |
| குத்தகை வாடகை | 15,831 | 12,186 | 179,053 | 121,526 | 61,172 |
| ஏனையவை | 2,214,217 | 737,479 | 3,791,812 | 2,421,232 | 2,847,318 |
| மொத்தம் | | | | | 3,365,552 |

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 3,365,552 தொகையான மொத்த வருமான மீதி நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.2 வீத வரி

ஆண்டின் ஆரம்பத்தில் நிலவிய நிலுவையில் 0.5% ஆன மிகக் குறைவான நிலையிலேயே அறவீடுகள் காணப்பட்டதுடன் ஆண்டின் போதான பட்டியல்படுத்தல்களில் இருந்தான அளவீடுகள் 66% ஆகக் காணப்பட்டன. நிலுவை வீதவரியின் அறவீடுகள் 1988 பிரதேச சபை (நிதி நிர்வாகம்) விதி 33 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 குத்தகை வாடகை**

---------------------------------

ஆண்டின் போதான பட்டியலிடப்பட்டவற்றில் 67% ஆன அளவில் அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை வாடகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாகக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 500,000 தொகையாகவும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,380,386 தொகையாகவும் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------

**3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்**

---------------------------------

(அ) இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 32,227 தொகையான கடன் மீதி 2015 ஆம் ஆண்டு முழுதும் அறவிடப்படாதிருந்தது.

(ஆ) ரூபா 16,028,188 பெறுமதியான காணி, கட்டிடங்களின் உரித்து உறுதி, உரித்துக் கட்டளை மற்றும் வரைபடம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---------------------------------

(அ) சபையின் முன்னைய ஆண்டிற்கான மூலதனச் செலவினம் ரூபா 89,962,279 தொகையானதுடன் இது மீளாய்வாண்டில் ரூபா 7,488,976 ஆகக் காணப்பட்டது. இதன் படி, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1090 சதவீதத்தால் குறைவைக் காண்பித்தது.

(ஆ) 2006 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்ட 458 கட்டிட விண்ணப்பங்கள் விதந்துரைக்கப்பட்ட வகையில் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது குறித்து பரீட்சித்து இணக்கச் சான்றிதழை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்திட்டம் தாமதமடைதல்**

---------------------------------

ரூபா 1,470,000 மதிப்பீட்டின் கீழ் பலங்தொட்ட வடக்கு சமூக மண்டப நிர்மாணிப்புப் பணிகள் 50மூ அளவில் பூர்த்தியடைந்திருந்த போதிலும், வீதி

அபிவிருத்தி அதிகாரசபையின் எதிர்ப்பின் காரணமாக நிர்மாணிப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 05 வருமான விடபங்களில் 11 சதவீதம் முதல் 295 சதவீதம் வரையும் 06 செலவின விடபங்களில் 50 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 வருமானத் தலைப்புகளுக்கு உரித்தான 06 துணை விடயங்களிற்காக பாதிடப்பட்ட ரூபா 2,492,006 தொகையான வருமானத்தில் எத் தொகையும் உழைக்கப்பட முடியாதிருந்ததுடன் 03 வருமானத் தலைப்புகளுக்கு உரித்தான 04 துணை விடயங்களிற்காக பாதிடப்பட்ட ரூபா 14,980,060 தொகையான வருமானத்தில் அறவீடு 50 சதவீதத்திலும் குறைவான நிலையில் காணப்பட்டது.

### 4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையின் 4:2 உப பிரிவின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

#### விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

இடர் முகாமைத்துவ அமைச்சால் திடீர் இடர்களின் போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த கொங்கிரீட் கலவை இயந்திரம் அனல் மின்சக்தியின் மூலம் இயக்கப்படுவதற்குத் தேவையான வசதிகள் இன்மையால் இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டு விளைவற்றுக் காணப்பட்டன.

**5.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) செயற்திட்ட முகாமைத்துவம்